**செ. கு. எண்:070** **நாள்: 10.07.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – **10.7.2019**

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி அருண்குமார் அவர்களின் அன்பு தந்தை திரு. கோவிந்தராஜுலு அவர்கள் உடல்நலக் குறைவால் இன்று **(10.7.2019)** காலை காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

திரு. கோவிந்தராஜுலு அவர்கள், திரு. அருண்குமார் அவர்களுக்கு நல்லதொரு தந்தையாகவும், வழிகாட்டியாகவும், பக்கபலமாகவும் திகழ்ந்தவர். திரு. கோவிந்தராஜுலு அவர்களின் மறைவு, அவருடைய குடும்பத்தினருக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

அன்னாரை இழந்து வாடும் அவருடைய மனைவி திருமதி லலிதாம்பாள், மகன் திரு. அருண்குமார் மற்றும் அவருடைய குடும்பத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**